சார்பு நீதிமன்றம், மேலூர்

OS 123/2022

| | |
|---|---|
| பெயர் | : சீதாலெட்சுமி |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :பெரியபிடாரன் |
| வயது | :35 |
| கிராமம் | :வெள்ளியங்குன்றம் |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :கூலிவேலை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

10.06.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அ.வ.எண்.698/2013, 3வது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை வழங்கிய தீர்ப்புரை வா.சா.ஆ.1. அ பதிவேட்டு நகல்கள் வா.சா.ஆ.2. என் அம்மா குமுதத்தின் இறப்பு சான்றிதழ் ஒளிநகல் வா.சா.ஆ.3. என் சித்தப்பா சின்னபொன்னாச்சி என்ற கண்ணு அவர்களின் இறப்பு சான்றிதழ் ஒளிநகல் வா.சா.ஆ.4. சின்ன பொன்னாச்சி என்ற கண்ணு என்பவர் 16.10.2019 அன்று எழுதியுள்ள உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. அ.வ.எண்.85/2021, மேலூர் மாவட்ட உரிமையியல் நிதிமன்றம் வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்குரை நகல் வா.சா.ஆ.6. என்னுடைய வழக்கறிஞர் கொடுத்துள்ள வழக்கு அறிவிப்பு வா.சா.ஆ.7. அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சல் மேலுறைகள் வா.சா.ஆ.8. அறிவிப்பு சார்பு

செய்யப்பட்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் 3 வா.சா.ஆ.9 வரிசை. என் அம்மா குமுதம் அவர்களின் வாரிசுதாரர் சான்றிதழ் வா.சா.ஆ.10. (குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.06.10 18:09:23 +0530

Sub Judge

Melur